**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.100/2019 (112/2019, 89/2019)**

NAME : சித்ரா

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 28.11.2023.**

இருதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் வருடம் 2018 என்றால் சரிதான். 2018-க்கு ஆண்டு வருமானம் தோராயமாக எவ்வளவு என்று காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2018ம் வருடம் வருமானவரி தாக்கல் செய்துள்ளேன். அதற்கான ஆதாரம் தேவை என்றால் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். அந்த வருடத்தில் எவ்வளவு வருமானவரி கட்டியுள்ளேன் எ ன்று ஞாபகம் இல்லை. 2013-லிருந்து வருமானவரி கட்டி வருகிறேன். வருமானவரி கணக்கில் எந்த வகையில் வருமானம் அதிகம் என்று காட்டியுள்ளேன்எ ன்றால் தென்னை மற்றும் மா தோப்புகளில் அதிக வருமானம் என்று சொல்லியுள்ளேன்.

என் பெயரில் மா, தென்னை தோப்பு இருப்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஏப்ரல் மாதம் 2018- ஆண்டு மட்டுமே ரூ.25,00,000/- மட்டுமே கடன் கொடுத்ததாக வருமானவரி கணக்கில் காட்டியுள்ளேன் என்றால் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததை காட்டவில்லை. வா.சா.ஆ1 முதல் 5 வரை ஆவண முன்னிலைக்கு நான் எந்த கடனும் பிரதிவாதிக்கு கொடுக்காததால் தான் வருமானவரி காட்டவில்லை என்றால் வருமானவரியில் காட்டவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடமும், என் கணவரிடமும், என் மகன் கார்த்திகேயனிடமும் தலா ரு.25 லட்சம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் எந்த காலகட்டத்தில் கொடுத்தீர்கள் என்றால் என்கணவரும், என் மகனும் கொடுக்கப்பட்டது எனக்கு தெரியாது நான் கொடுத்தது மட்டும் தெரியும்.

நான் கடன் கொடுத்த விவரம் என் கணவருக்கு தெரியும் என் மகனுக்கு தெரியாது. என் கணவர் கொடுத்தது என்மகனுக்கு தெரியாது. நானும், என் கணவரும் கொடுத்த கடன் என்மகனுக்கு தெரியாது. நானும், என் கணவரும் ஒன்றாகவும், என்மகன் தனியாகவும் வசிக்கிறோம். நான் கொடுப்பதற்கு முன்பாக என் கணவர் கொடுத்தாரா (அதற்கு பின்பு கொடுத்தாரா என்றால் இந்த கேள்விக்கு தெரியாது என்று கூறியதால் எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்தார்). என் கணவர் பிரதிவாதிக்கு கடன் கொடுத்த வழக்கு பற்றி எனக்கு தெரியும். பிரதிவாதி என்னிடம் பெற்ற கடன் சம்மந்தமாக என்கணவரிடம் பேசியுள்ளேனா என்றால் பேசியுள்ளேன். அதேபோல் என் மகன் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தது சம்மந்தமாக எங்களிடம் பேசியிருக்கிறார்.

எனக்கும், என்கணவருக்கும், என்மகனுக்கும் இந்நீதிமன்றத்தில் வழக்கை நடத்துவதற்கு ஒரே வழக்கு என்றால் சரிதான். இந்த வழக்கில் வா.சா.ஆ1 முதல் 5 வரையுள்ள ஆவணங்களில் சாட்சியாக காட்டப்பட்டவர் எனது உறவினரா என்றால் உறவினரும் இருக்கிறார்கள் நண்பரும் இருக்கிறார்கள். மனோகரன் எனது உறவினர். பூபதி, முருகேசன், விஜயன், கோபி மற்றும் முருகன் ஆகியோர்கள் நண்பர்கள். இந்த சாட்சிகள் என் கணவருக்கு நெருக்கமானவர்கள் என்றால் சரிதான். ஜெயசங்கருக்கும் நெருக்கமானவர்கள். இந்த சாட்சிகளில் என்கணவருடன் பணிசெய்வதர்கள் யார், யார் என்றால் பூபதி மட்டுந்தான். மற்ற சாட்சிகள் என்ன தொழில் செய்கிறார்கள் எங்கு இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியுமா தெரியாதா என்றால் அவர்கள் என்ன தொழில் செய்கிறார்கள் என்று தெரியாது.

சாட்சிகள் கோபி மற்றும் முருகன் ஆகியோர்கள் என்கணவருடன் பாரஸ்ட் டிபார்ட்மெண்டில் வேலை பார்த்தவர்கள் என்றால் எனக்கு தெரியாது. சாட்சி முருகேசன் என்பவர் வனத்துறையில் வேலை செய்தவர் என்றால் எனக்கு தெரியாது. சாட்சி முருகேசன் என்கணவருக்கு நண்பர். இந்த சாட்சிகள் அனைவரும் நாங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சிகள் வா.சா.ஆ1 முதல் 5 வரையிலான ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளனரா என்றால் என் கணவருக்கு நண்பர் தான் ஆனால் ஜெயசங்கள் அவர்களை அழைத்து வந்து இரண்டுபேர் முன்னிலையில் தான் கையொப்பம ் செய்தார்கள். ஒவ்வொரு பாண்டு எழுதும்போதும் அந்த 5 தேதிகளிலும் சாட்சிகள் எவ்வாறு அங்கு வந்தாகள் என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் 5 தேதிகளிலும் ஜெயசங்கருடன் தான் வந்தார்கள்.

இந்த 5 சாட்சிகளையும் யார் என்று அவருக்கு தெரியாது என்று பிரதிவாதி ஜெய்சங்கர் சொல்வது பொய். இந்த ஆவணங்களை தயார் செய்ததுபோல் சாட்சிகளையும், அவர்களின் கையெழுத்துக்களையும் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 முதல் 5 ஆவணங்கள் முன்னிலைக்கு பிரதிவாதி எந்த கடனும் பெறவில்லை என்று சொல்வது பொய். நாங்கள் தயார் செய்தது என்றால் பொய். இந்த வழக்கிற்கு முன்பாக நான் கொடுத்த அறிவிப்பிற்கு பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பு தெரியாது. வா.சா.ஆ1 முதல் 5 ஆவணங்கள் தவிர பிரதிவாதி சம்மந்தமாக ஆவணங்கள் வாங்கி வைத்துள்ளோமா என்றால ் இல்லை. நானும், என் கணவரும் இந்த ஆவணங்களோடு சேர்ந்து எழுதப்படாத காசோலைகள் வாங்கி வைத்துள்ளோம் என்று சொல்வது பொய்.

எந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் எஸ்.பி.ஐ. (state bank)குடியாத்தம். எனக்கு மா, தென்னை தோப்பு தவிர வேறு வருமானம் தரக்கூடிய சொத்து எதுவும ் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ1 முதல் 5 வரையிலான ஆவணங்களை நாங்களாக போலியாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கில் கோரப்பட்ட தொகையை பிரதிவாதி தரவேண்டிய அவசியமில்லை என்று சொல்வது சரியல்ல. பிரதிவாதி

அவ்வளவு தொகையை வாங்கவேண்டிய அவசியம் அருக்கில்லை என்று சொல்வது சரியல்ல. மரவியாபாரத்திற்காக வாங்கினார். இந்த வழக்கு பொய்யான சங்கதிகள் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்.